ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,263—1962 අගෝස්තු 17 වැනි සිකුරාදා—1962.8.17

13,263 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் . | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 481 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாநுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | — | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

1961 ம் ஆண்டின் கம்பனிகள் (பரிசோதகர்) பிரமாணங்களின் கீழ் (7 ஏ பகுதியின் பிரகாரம்)

1961-62 ம் வருட காலத்தில் பதியப்பட்ட பரிசோதகர்களின் குறை நிரல்

தனியாள் (சாதாரண பத்திரங்கள்)

| பெயர் | வியாபார விலாசம் |
|---|---|
| 1. வொன்செகா, எட்வின் விருன்சிஸ் எமானுவேல் .. | 50, ஜெனறல் லேக்ஸ் ரேட், கொழும்பு 2 |
| 2. கணேசலிங்கம் சபாபதிப்பிள்ளை .. .. | 265, காலி ரேட், கொழும்பு 3 |
| 3. நாகநாதன் மருதப்பா .. .. | குலுகல்ல அன் விக்கிரமநாயக்க, கவ்லூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 4. நவரத்தினம் தர்மன் இராசையா .. .. | 32, சேர் மொகமட் மார்க்கான் மார்க்கர் மாவத்த, கொழும்பு 3 |

கொழும்பு 1,
1962 ம் ஜூலை மீ 16 ந் உ.

டபிள்யு. எம். செல்லையா,
கொம்பனிகள் பதிவாளர்.

8-809/1

---

1961 ம் ஆண்டின் கம்பெனிகள் (பரிசோதகர்) பிரமாணங்களின் கீழ் (7 பி பகுதியின் பிரகாரம்)

1961-62 ம் வருட காலத்தில் பதியப்பட்ட பரிசோதகர்களின் குறை நிரல்

தொழில் நிலையங்கள் (சாதாரண பத்திரங்கள்)

| தொழில் நிலையத்தின் பெயர் | பங்காளர்களின் பெயர்கள் | வியாபார விலாசம் |
|---|---|---|
| 1. ஐயர் அன் கம்பனி .. .. | சிறினிவாச றெங்கன், தர்மராச இராமசாமியும், கிருஷ்ணமூர்த்தி சுவாமிநாதனும் | நெகிறிஸ் கட்டிடம், யோக் வீதி, கொழும்பு 1 |
| 2. ஏ. ஐ. மாக்கான் மார்க்கர் அன் கம்பனி .. | அலவி இப்ருஹிம் மாக்கான் மாக்கர், யோன் டியனதாசும் தர்மன் இராசையா நவரத்தினமும் | 32, சேர் மொகமட் மாக்கான் மார்க்கர் மாவத்த, கொழும்பு 3 |
| 3. குலுகல அன் விக்கிரமநாயக .. | உப்பர்லிசா குலுகலவும் மருதப்பா நாகநாதனும் .. | 29, 2/11 கவ்லூர் கட்டிடம், கொழும்பு 1 |
| 4. கேசவன் அன் கம்பனி .. .. | தாயில் பத்மநாதன் கேசவன், சொக்கலிங்கம் விஸ்வநாதனும் முத்தையா மனோகரனும் | 78, மெயின் வீதி, கொழும்பு 11 |
| 5. கணேசலிங்கம் அன் கம்பனி .. | சபாபதிப்பிள்ளை கணேசலிங்கம் .. .. | 265, காலி ரேட், கொழும்பு 3 |

கொழும்பு 1,
1962 ம் ஜூலை மீ 16 ந் உ.

டபிள்யு. எம். செல்லையா,
கொம்பனிகள் பதிவாளர்.

8-809/2

## யாத்திரிகை விதிமுறை

### மண்டூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா—1962

### மட்டக்களப்பு மாவட்டம்

இக்கோயில் திருவிழாவுக்குச் சமுகம் கொடுக்கும் யாத்திரிகர்கட்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்கட்கும் அறிவிப்பது யாதெனில் :—

மேற்கூறிய ஆலயத்திருவிழா 1962 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 25 ந் திகதி ஆரம்பமாகி 1962 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 14 ந் திகதி முடிவடையும்.

இதில் பங்குபற்றும் யாத்திரிகர்கட்கும் மற்றும் இதில் சம்பந்தப்பட்டவர் கட்கும் :— 1946 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 2 ம் திகதியைக்கொண்டதும் அரசாங்க வர்த்தமானி இல. 9,558 க் கொண்டதும், 1952 ம் ஆண்டு யூலை மாதம் 18 ந் திகதியைக்கொண்டதும் அரசாங்க வர்த்தமானி இல. 10,426 க் கொண்டதுமான வர்த்தமானியில் அடங்கப்பெற்ற நடைமுறை விதிகள் :— கோவில் திருவிழா முடிவடையும் வரை அமுலில் இருக்கும்.

டெ. அலுவிகார,
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, மட்டக்களப்பு,
1962 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 3 ந் திகதி.

8–582/1

---

## யாத்திரிகை விதிமுறை

### கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் ஆலயத்திருவிழா—1962

### மட்டக்களப்பு மாவட்டம்

இக்கோயில் திருவிழாவுக்குச் சமுகம் கொடுக்கும் யாத்திரிகர்கட்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்கட்கும் அறிவிப்பது யாதெனில் :—

மேற்கூறிய ஆலயத்திருவிழா 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ந் திகதி ஆரம்பமாகி அதே மாதம் 17 ந் திகதி முடிவடையும்.

இதில் பங்குபற்றும் யாத்திரிகர்கட்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்கட்கும் :— 1952 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ந் திகதியைக்கொண்ட அரசாங்க வர்த்தமானி இல. 10,434 க் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை விதிகள் :— மேற்கூறிய கோயில் திருவிழா முடிவடையும் வரை அமுலில் இருக்கும்.

டெ. அலுவிகார,
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, மட்டக்களப்பு,
1962 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 3 ந் உ.

8–582/2

## பிரகடனம்

யாழ்ப்பாணம் மாவட்டதிலுள்ள பூநகரி பிரிவிலுள்ள கால்நடைகளிடையே "தொடை வீக்கம்" நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க "தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்த சட்டத்தின்" கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினாலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உப உட்பிரிவு (1) ன் விதிகளுக்கு அமையவும், அரசாங்க பிரதம மிருக வைத்தியரான அ(b)பேரத்ன-(b) பண்டாரநாயக ஆகிய யான், கீழ்க்குறித்த எல்லைகளுக்குள் அடங்கிய பிராந்தியத்தை ஒரு "தொற்று நோய் பிரதேசம்" என்று பிரகடனப்படுத்துகின்றேன்:—

வடக்கு : கடல் வரி ;

தெற்கு : மாந்தை பிரிவின் வட எல்லை ;

கிழக்கு : காரச்சி–துணுக்காயப் பிரிவின் மேற்கெல்லை ;

மேற்கு : கடல் வரி.

இப்பிரகடனம் மறு அறிவித்தலால் நீக்கப்படும்வரை இப்பகுதியிலிருந்தும் இப்பகுதிக்கும் கால்நடைகள் அல்லது மாட்டுவண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென்று இதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின்கீழ் பிரகடனஞ்செய்கின்றேன்.

"தொற்றுநோய்" பிராந்தியத்திலுள்ளவர்கள் சட்டப்பிரகாரம் கையாள வேண்டிய செயற்பாடுகளை எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்றுநோய் (விலங்குகள்) பிரமாணங்களை, கால்நடை உரிமையாளரும் மாட்டுவண்டிகள் உரிமையாளரும் தம் அவதானத்துக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களை சாவகச்சேரி பகுதியில் உள்ள மிருக வைத்தியரிடமிருந்தும் பூநகரி பகுதி காரியாதிகாரியின் கவரியில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

சண்டுப்பொறிக்கப்பட்ட தேதிமுதல் இப்பிரகடனம் செயல்முறைக்கு வந்துள்ளது.

அ(b)பேரத்ன-(b)பண்டாரநாயக,
அரச பிரதம மிருக வைத்தியர்.

கமத்தொழில் துணையதிபர் களரி,
(விலங்குற்பத்தி-சௌக்கியம்),
கமத்தொழிற்றுறை,
பேராதனை, 8 ஆவணி 1962.

8–608

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3-30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3-30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேபர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது